DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

S.C.No. -151/2024

Prosecution PW -32

| | | | |
|---|---|---|---|
| Name | ஐஸ்வர்யா | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 07-10-2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A10 present.

முதல் விசாரணை

நான் தற்போது பெரம்பலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.04.2024 ஆம் தேதி நான் அய்யம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் பணியில் இருந்தபோது உதவி ஆய்வாளர் குமார் என்பவர் குற்ற எண். 202/2024 இதச பிரிவு 147,148,294(b),341,323,324,506(2),302 மற்றும் 3(1)of PPDL Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து மேல் விசாரணைக்கு வழக்கு கோப்பினை என் பார்வைக்கு வைத்தததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்துகுமர வேல், பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். பார்வை மகசர் அ**.**த**.**சா**.**ஆ**.25** , மாதிரி வரைப்படம் அ**.**த**.**சா**.**ஆ.**26**. பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து சாதாரண மண், இரத்தம் கலந்த மண் சேர்ந்து TN36AZ0660 என்ற எண்ணுள்ள கார் மற்றும் TN68U0730 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் மற்றும் உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவு ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ**.**த**.**சா**.**ஆ**.27**. TN36AZ0660 என்ற எண்ணுள்ள கார் ச**.**பொ**.9.** TN68U0730 என்ற பதிவெண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் ச**.**பொ**.10.** உடைந்த கண்ணாடி துகள்கள் சிறிதளவு ச**.**பொ**.11.** பின்னர் சாட்சிகள் முத்துகுமரவேல், மற்றும் பன்னீர் செல்வம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செந்தில்குமார், பிரவீன்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அங்கு இருந்த தமிழரசி, சுமலதா, ராஜகுமாரி, பாஸ்கர், சுரேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ இடம் சென்று அங்கு துரைராஜன், வெங்கடேஸ்வரன்,ஜெயராமன், அப்துல் மாலிக், யுவராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று இறந்த ஜெயக்குமார் அவரின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து சாட்சிகள் நந்தகுமார்,

விஜயகுமார், மணி, செல்வகுமார், விக்னேஷ் ஆகியோர்களின் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.**28**. பின்னர் தீனதயாளன், வீரக்குமார், கருணாநிதி, சிவானந்தம், முருகேசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன ஜெயக்குமாரின் பிரதேத்தின் மீது இறப்பின் காரணம் அறியும் பொருட்டு சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன் என்பவர் மூலம் பிரேத பரிசோதனை செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பின்னர் 02.04.2024 ஆம் தேதி சாட்சி ரமேஷ் என்பவர் ஆஜர் செய்த செல்போனை பெற்று கணிணி இயக்குநரான முதல் நிலை காவலர் வேல்முருகன் என்பவரிடம் கொடுத்து செல்போனில் உள்ள விடியோவை பதிவிறக்க செய்யச்சொல்லி உத்தரவிட்டேன் அதன்பேரில் முதல் நிலை காவலர் வேல்முருகன் செலபோனில் உள் விடியோவை நிலையத்தில் உள்ள கணிணி உதவியுடன் HP-Pendrive வில் பதிவிறக்கம் செய்து கொடுத்தார். வேல்முருகன் செல்போனில் இருந்த விடியோவை HP-Pendrive வில் பதிவிறக்கம் செய்வதாக பிரிவு 65(B) சாட்சிய சட்டத்தின்படி சான்றும் பெற்றேன். விடியோவில் உள்ள எதரீகளைஅடையாளம் கண்டு புலன் கொண்டும் சூல மங்கலம் புதிய பைபாஸ் பாலம் அருகே 1வது எதிரி அழகேசன், 2வது எதிரி கார்த்திக் ராஜா, 3வது எதிரி சந்தோஷ்குமார், 7வது எதிரி விஜேயந்திரன் ஆகியோர்களை கைது செய்து சாட்சிகள் தினேஷ், மோகன்ராஜ் முன்னிலையில் விசாரிக்க 1வது எதிரி தானாக முன்வந்து கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தினை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்கும்லத்தின் அடிப்படையில் பசுபதி கோயில் காளிதாஸ் தென்னந்தோப்பிற்கு அழைத்துச்சென்று பிடித்து ஆஜர் செய்த 5-மூங்கில் கட்டைகளையும், இரத்த கறை படிந்த வெள்ளை நிற முழுக்கை சட்டையும், இரத்த கறை படிந்த வெள்ளை நிற கட்டம் போட்ட ஊதா நிற கைலி -1, ஆகியவற்றை மகசரில் கைப்பற்றினேன். 1வது எதிரியின் ஒப்புதல் வாக்கும்லத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.த.சா.ஆ.**5** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.த.சா.ஆ.**6.** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 5 முங்கி ல் கட்டைகள் ஏற்கனவே சா.பொ.1 முதல் 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரத்த கறை படிந்த வெள்ளை நிற முழுக்கை சட்டையும் சா.பொ.**12** இரத்த கறை படிந்த வெள்ளை நிற கட்டம் போட்ட ஊதா நிற கைலி -1 சா.பொ.**13**. பின்னர் எதிரிகளையும் தடயத்தையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் செந்தில்குமார், பிரவின்குமார், சுமலதா, தமிழரசி, ராஜகுமாரி ஆகியோர்களை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தில் இறந்துபோன ஜெயக்குமார் மற்றும் காயம்பட்ட பிரவின்குமார், செந்தில்குமார் ஆகியோர்களை சிகிச்சைக்கு அனுமதித்து விபத்து பதிவேடு வழங்கிய மருத்துவர் செந்தில்குமார் அவரக்ளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம்பட்ட செந்தில்குமார், பிரவின்குமார் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் கோபிநாத் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் செந்தில்குமாருக்கு வழங்கிய மருத்துவ விடுவிப்பு சட்ட கருத்துரை அ.த.சா.ஆ.**29**. பிரவின்குமாருக்கு வழங்கிய மருத்துவ விடுவிப்பு சட்ட கருத்துரை அ.த.சா.ஆ.**30**. பின்னர் 04.04.2024 ஆம் தேதி 4வது எதிரி சரண்ராஜ், 5வது எதிரி முத்து என்கிற முத்துராஜ், 6வது எதிரி சதாசிவம், 8வது எதிரி மனோகரன், 10 வது எதிரி கென்னடி ஆகியோரும்

08.04.2024 ஆம் தேதி 9வது எதிரி ராஜிவ்காந்தியும் தஞ்சாவூர் நீதிமன்ற நடுவர் எண்.3ல் நீதிமன்றத்தில் சரண் அடைந்தவர்களை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி 12.04.2024 ஆம் தேதி 4,5,6,8,9,10 எதிரிகளை போலிஸ் காவலில் எடுத்து சாட்சிகள் மணிவேல், முகமது ரபிக் முன்னிலையில் 8,10 எதிரிகளை விசாரிக்க அவர்கள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை அதே சாட்சிகள் முன்னிலையில தனித்தனியாக பதிவு செய்தேன். அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பசுபதிகோயில் மெயின் ரோடு தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப் அருகே அழைத்துசென்று இருவரும் தனித்தனியே எடுத்து ஆஜர் செய்த தலா ஒரு மூங்கில் கட்டையும் மகசரில்கைப்பற்றினேன். 8வது எதிரி கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.**31**. 10வது எதிரி கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிஅ.த.சா.ஆ.**32**. 8வது எதிரி யின் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.**33**. 10வது எதிரி யின் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.**34**. பின்னர் 13.04.2024 ஆம் தேதி 4,5,6,9 எதிரிகளை சாட்சிகள் தெட்சிணாமூர்த்தி, ரிஷப் முன்னிலையில் விசாரிக்க அவர்கள் தனித்தனியாக கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தினை அதே சாட்சிகள் முன்னிலையில பதிவு செய்தேன். 4,5,6 எதிரிக்ள கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் பசுபதிகோயில் மெயின் ரோடு தஞ்சாவூர் செல்லும் பஸ்ஸடாப் அருகே அழைத்துசென்று அவர்கள் தனித்தனியே எடுத்து ஆஜர் செய்த தலா ஒரு மூங்கில் கட்டையும் மகசரில் கைப்பற்றினேன். 4வது எதிரி கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.**35**. 5வது எதிரி கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதிஅ.த.சா.ஆ.**36**. 6வது எதிரி கொடுத்து ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.த.சா.ஆ.**37**. 4வது எதிரி யின் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.**38**. 5வது எதிரி யின் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.**39**. 6வது எதிரி யின் கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ **40.** பின்னர் எதிரிகள் மற்றும் தடயச்சொத்துடன் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இறந்துபோன ஜெயக்குமாரின் சடலத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பூவரசன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். பின்னர் சடலத்தின் எடுக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளையும், கைப்பற்றப்பட்ட தடயத்தையும் ரசாயன பகுப்பாய்வு செய்த தஞ்சாவூர் தடய அறிவியல் இளைய நிலை அறிவியலர் செந்தில் பாபு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் அவர் வழங்கிய உடல் உள்ளுறுப்பு அிறிக்கை அ.த.சா.ஆ.**41**. தடயப்பொருட்களின் ரசாயன பகுப்பாய்வு அறிக்கை அ.த.சா.ஆ.**42**. சேதம் அடைந்த காருக்கு சேதம் மதிப்பு வழங்கிய கார் டாக்டர் கடையின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் செந்தில்குமார், பிரவின்குமார், மற்றும் ரமேஷ் ஆகியோர்களிடம் குவிமுச பிரிவு 164(5)ன் கீழ வாக்குமூலம் பதிவு செய்ய தஞ்சாவூர் நீதித்துறை நடுவர் எண். 3 நீதிமன்றத்தில் ஆஜர் செய்து வாக்குமூலம் பதிவு செய்ய ஏற்பாடு செய்தேன். பின்னர் சாட்சிகள் ஆல்வின்ராஜ், வினோ, நடராஜன், வேல்முருகன், மோகன்,குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் என் விசாரணை முடித்து 1 முதல் 10 எதிரிகளின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

| | |
|---|---|
| நீதிமன்ற கேள்வி: | : முதல் நிலை காவலர் வேல்முருகன் பதிவிறக்கம் செய்து கொடுத்த HP Pendrive வை ஒப்படைக்காததை குறித்து இந்நீதிமன்றத்தில் இருந்து 15.05.2025 ஆம் தேதியிட்ட கடிதம் அனுப்பியும், நீதிமன்றத்தில் ஒப்படைக்காததற்கு என்ன காரணம் ? |
| பதில் | : நான் காவல் நிலையத்தில் தொடர்புகொண்டு தேடிப்பார்க்க சொன்னேன். தேடி பாரத்துவிட்டு இல்லை என்று சொன்னார்கள். இன்றுதான் தேடிப்பார்த்து கண்டுப்பிடித்து எடுத்து வந்தார்கள். |

சாட்சி ஆஜர் செய்த HP Pendrive வை நகல் எதிரிகளுக்கு வழங்கி நீதிமன்றத்தில் முறைப்படி தாக்கல் செய்யும் பொருட்டு முதல் விசாரணை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்தரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒ/ம்.G.சுந்தரராஜன்,B.Sc., B.L.,)
கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்